(5) THE MADRAS VILLAGE COURTS (AMENDMENT) BILL, 1961 AS PASSED BY THE COUNCIL (L.A. BILL NO. 2 OF 1961)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Village Courts (Amendment) Bill, 1961, as passed by the Council, be taken into consideration.'

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த சென்னை வில்லேஜ் கோர்ட் ஆக்ட் 1888-ம் ஆண்டிலே நிகழ்த்தப்பட்ட சட்டமாகும். அது பழைய சட்டம். ஆனால் நாம் இந்த மன்றத்திலே பஞ்சாயத்துச் சட்டம், கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேறுகின்ற வரையிலும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக்கூட இது நீதி பரிபாலனத்திற்கு உதவியாக இருந்தது. இப்போது இது எடுக்கப் பட்டிருக்கிறது. இப்போது பழைய சட்டத்திலே 13-வது செக்ஷன்படி ரூ. 50 வரையிலும் கிராமக் கோர்ட்டுகள் வசூலிக்கலாம் என்று சட்ட மிருக்கிறது. மற்றொரு பிரிவு அதாவது 14-வது பிரிவில் கட்சிக்காரர்கள் சம்மதப்பட்டு, அவர்கள் ஒப்புக் கொண்டால் ரூ. 200 வரையிலும்கூட வசூலிக்கலாம் என்று சட்டமிருக்கிறது. இப்போது இதை இந்தக் கட்சிக் காரர்களைக் கேட்காமலேயே 200 ரூபாய் வரை வசூலிக்கலாம் என்பதுதான் ஒரு திருத்தம். இப்போது இந்த 200 ரூபாய் வரை வசூல் செய்யலாம் என்று போட்டிருக்கும் சட்டம் கிராமங்களிலே மிக நல்ல முறையில் நடந்து கொண்டு வருகிறது. இதை கட்சிக்காரர்களின் சம்மதம் இல்லா மலேயே செய்யலாம் என்று சொல்வது கட்சிக்காரர்களுக்கும் சவுகரியமாக இருக்கும். அவர்கள் இதை வரவேற்பார்களென்றே நம்புகிறேன். அதனால் அவர்களுக்கு முன்சீப் கோர்ட்டுக்கும் போக வேண்டியதில்லை. அதனால் கோர்டு செலவும் அவர்களுக்குக் குறையும். ஆகவே தான் இந்த 200 ரூபாய்க்கு உயர்த்துவதற்கு ஒரு திருத்தம் முக்கியம் என்று கொண்டு வந்திருக்கிறோம்.

மற்றொன்று இப்போது வெயிட்ஸ் அண்டு மெஷர் வந்த பிறகு மெட்ரிக் சிஸ்டம் வந்திருப்பதாலே, அந்த அளவுக்கு அதைத் திருத்த வேண்டுமென்பதற்கு ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 40-வது செக்ஷனில் போடப்பட்டு இருக்கிறது. மற்றொரு திருத்தம் என்னவெனில், இந்தச் சட்டம் கன்யாகுமரி மாவட்டம், செங்கோட்டை தாலுகா ஆகிய இந்த இரண்டு இடங்களிலும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்பது. இவைகள் முன்பு திருவாங்கூர்-கொச்சியில் சேர்ந்திருந் ததால், அங்கு அந்தச் சட்டம் அமுலில் இருந்தது. இப்போது அதை ரத்து செய்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது. அந்த நோக்கத்தோடு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் அந்த பழைய சட்டத்திலே நியமிக்கப்பட்டவர்கள் இருப்பார்கள். அதற் குரிய வகையிலேதான் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறன்றன. ஆகவே இந்தத் திருத்தங்கள் அடங்கிய இந்த மசோதாவை கனம் அங்கத் தினர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டு, என்னுடைய வார்த்தை களை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Motion moved—

That the Madras Village Courts (Amendment) Bill, 1961, as passed by the Council, be taken into consideration.'

The motion is before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர் களே, இது ஒரு நல்ல மசோதா. இதை நான் உண்மையிலேயே வர வேற்கிறேன். கிராமங்களில் பஞ்சாயத்து கோர்ட்டுகளில் 50 ரூபாய் வரை யிலே அவர்களே வசூலிக்கலாம். ஆனால் அதற்கு மேல் 200 ரூபாய் வரை என்றால், அவர்கள் வாதிப் பிரதிவாதிகளின் சம்மதத்தைப் பெற வேண்டும். இப்போது பஞ்சாயத்து கோர்ட்டே 200 ரூபாய் வரையிலும்

* Printed as Appendix VI on page 336-339 infra.

வசூலிக்கலாம் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது கிராம மக்களுக்கு மிகவும் நல்லது. காரணம் என்னவென்று கேட்டால், ஐம்பது ரூபாய்க்கு மேல் என்றிருந்தால், வாதிப் பிரதிவாதிகளின் சம்மதத்தைப் பெற்று 200 ரூபாய் வரையிலும் வசூலிக்கலாம் என்று முன் இருந்தது. ஆனால் இப்போது இப்படி இருப்பது அனுவசியமாக அவர்கள் முன்சீப் கோர்ட்டுக்குப் போவதைக் கட்டுப்படுத்தும். கிராமப்புறங்களில் அடிக்கடி இப்படிக் கோர்ட்டுக்குப் போய் வருவது என்பது மிகவும் கஷ்டமான காரியம். இப்படிப் போவதால் அவர்களுடைய வேலையும் கெட்டுவிடும். பணமும் செலவாகும். அந்தக் காரணத்தை ஒட்டித்தான் சர்க்கார் இந்தத் திருத் தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு சில சமயங்களில் அவர்கள் சரிவர இணங்கவில்லை என்று சொன்னாலும் கூட, கிராமப்புறத்திலே உள்ள மக்கள் அவர்களை எப்படியாவது சமாதானப்படுத்தி, பஞ்சாயத்து கோர் டுக்கே வராமல் செய்துவிடுகிறார்கள். நீங்கள் இப்படி ஒத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்களிடத்திலே ஒரு சமாதானத்தைச் சொல்லி, அதிகம் செலவாகாத முறையிலே காரியத்தை முடித்து வைப்பார்கள். கிராமப் புறத்திலே அதிகமாக அவர்கள் கோர்ட்டுக்குப் போவதையே விரும்புவ தில்லை. ஆகவே அந்த அபிப்பிராயத்தை யொட்டி அவர்கள் முன்சீப் கோர்ட்டுக்கு மேலும் போகாது இருக்கிற வழியிலே இந்தச் சட்டம் கொண்டு வந்து, 200 ரூபாய் வரையிலும் வாதிப் பிரதிவாதிகளின் சம்மதம் இல்லாமலேயே செய்யலாம் என்று செய்திருப்பதைக் கண்டு நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் சொல் லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் 1958-லே ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் வந்த இடங்களிலே, பஞ்சாயத்து போர்டுகளுக்கு இனிமேல் இப்படிப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் கிடையாது. அதற்குக்கூட பதில் சொல்கின்றபோது, இனிமேல் ரெவினியூ இலாகா கவனிக்குமென்று சொன்னார்கள். அதன்படி பஞ்சா யத்து கோர்ட்டுகள் தனியாக நியமிக்கப்பட்டு, சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் இயங்க வேண்டியிருந்தது. அதனால் பஞ்சாயத்து கோர்ட்டும், பஞ்சாயத்து போர்டும் தனியாக இயங்கிக் கொண்டிருந்தது. பஞ்சாயத்து போர்டு வசூலிக்கலாம் என்று ஒரு உத்தரவு போட்டதன் காரணமாக, பஞ்சாயத்து போர்டு வழக்குகளை விசாரணை செய்து வந்தது. ஆகவே இதற்கு முன்பு பஞ்சாயத்து கோர்ட்டுகள் இருந்ததுபோல் தனியாக இருந்து இயங்க வேண்டுமா, அல்லது வேறு ஏதாவது ஒரு கோர்ட்டு சமுதாய நலத் திட்டப் பகுதிகளிலே உள்ளதுபோல் நியமிக்கப்படுமா அல்லது நான் கேள்விப்பட்டதுபோல் சப்-ரிஜிஸ்த்திரார் ஆபிசிலேயே இதை விசாரிக்கலாம் என்று இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். சப்-ரிஜிஸ்த்ரார் ஆபீசில் விசாரிப்பதற்கான ஒரு ஜீ.ஓ.-வை நான் பார்த்திருக்கிறேன். அதற்கு பிறகு அந்த யோசனையை ஐ.ஜீ. அவர்கள் கைவிட்டு விட்டார்கள். இதற்கு முன்னால் சப்-ரிஜிஸ்த்திரார் ஆபீசில் ஒரு பெஞ்ச் கோர்ட்டு இருக்கும். ஆகவே அதைப்போல் ஏதாவது செய்து விசாரிக்கச் சொல்வார்களா என்பதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே நன்கு விளக்க வேண்டும். இப்போது இது ஒரு பெரிய குழப்பமாக இருக்கிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டப் பகுதிகளில் இனிமேல் எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதை யெல்லாம் கனம் அமைச்சர் அவர்களை விளக்கு மாறு கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri R. SRINIVASA IYER** : ஸார், இந்த மசோதா மேல் சபை யிலிருந்து பாஸ் ஆகி வருகிறது. நல்ல மசோதா. ரொம்ப நாளாக கிராம கோர்ட்டுக்கு அதிகார வரம்பு 50 ரூபாய் என்றிருந்தது. இப்போது 200 ரூபாய் என்றாக்குவது அவ்வளவு பிரமாதம் ஒன்றுமில்லை. ஏனென்றால் விலைவாசி உயர்வை உத்தேசித்து 50 ரூபாய் என்று முன் பிருந்தது இப்போது 200 ரூபாய்க்குச் சமமாகும். இதிலே உள்ள சில அம்சங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஆக்ட் 10/50-ல் கூட பஞ்சா யத்து கோர்ட் ஏற்பட்டாலும், அதிலே கட்சிப் பிரதிகட்சிகள் ஏற்பட்டு, முன்சீப் கோர்ட்டில் ட்ரான்ஸ்பர் பெடிஷன்கள், தீர்மானத்திற்குப் பிறகு ரத்து பண்ண வேண்டும் என்று பெடிஷன், இம்மாதிரி இருந்தது. விற்பாடு Act of 35 of 1958 பாஸான பிறகு பஞ்சாயத்து யூனியன்

28th March 1961] [Sri R. Srinivasa Iyer]

கவுன்சில் ஏற்பட்ட பிறகு பஞ்சாயத்துக் கோர்ட்டாக இருந்ததும் போச்சு. கிராம கோர்ட்டும் போச்சு. ஐம்பது ரூபாய்க்குக்கூட பழைய வில்லேஜ் கோர்ட் ஆக்ட்படிக்கு எலெக்ஷன் மூலம் செய்ய வேண்டுமென்று 12 noon.
இருந்தது. ஐம்பதாம் வருஷத்திலிருந்து அது அடியோடு போய், கிராம முன்சீப்பே பஞ்சாயத்துக் கோர்டாக இருக்கிறார்கள். பிராது யாரிடம், எப்படிக் கொடுப்பது என்பதில் கஷ்டம். தபாலில் அனுப்பினால், காலா வதி ஆகிவிடுகிறது. இந்த பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இல்லாதபோது, கிராம முன்சீப்பே கோர்ட்டாக இயங்குவது இருக்கக் கூடாது. இந்த ஆக்ட் போட்டு, ரூல்ஸ் போட்டு, கோர்ட்டு அமைக்க உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். ஸ்ரீ அண்ணாமலை இதை வரவேற்றார்கள். கோர்ட்டு பீ ஸ்டாம்ப் இல்லாமல் கிராம மக்களுக்கு பிராது செய்வது நல்லதுதான். ஆனால், செக்ஷன் 73-ல் முன்சீப் கோர்ட்டுக்கு "question of fact"-ல் revision-க்கு போக முடியாது. கிராம கோர்ட்டிலே ஜட்ஜ்மெண்ட் எழுத வேண்டியதில்லை ; வாக்கு மூலம் விசாரிக்க வேண்டியதில்லை ; தான் ஏதோ கேள்விப்பட்டாலும் போதும். "In Small Cause Court, notes of evidence போதும். No judgment need be written" என்ற முறையிலே, செக்ஷன் 73-ஐயும் சேர்த்து திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இருநூறு ரூபாய் என்றாலும், அதி லேயே அழிந்துவிடும் குடும்பங்களும் கிராமத்தில் உண்டு. ஆகவே கட்சிப் பூசல்களால், மெஜாரிடி, மைனாரிடி பேரில் தீர்மானம் செய்துவிட்டால், தீர்ந்து போச்சு. "question of factலும் ரிவிஷனுக்கு போக முடியாது. Question of factலும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புக்கு ரிவிஷன் பவர் இருந்தால் நல்லது; பவர் இல்லாவிட்டால், 'no question of law rejected; no question of corruption rejected, no question of injustice rejected ; என்றாகிவிடும். ஆகவே செக்ஷன் 73-ம் சேர்த்து உடனடியாகத் திருத்தம் செய்ய வேண்டும். இந்த மசோதா மேல்சபையில் நிறைவேறி இங்கே வந்திருக்கிறது. இப் பொழுது புதுத் திருத்தம் செய்ய முடியாமல் இருக்கும். மேல் சபை எல்டர்கள் சபை, அவர்கள் கொண்டு வந்திருக்கிறது என்று இருந்தாலும் இதிலே "Question of fact" உடன் கூட பவர் ஆப் ரிவிஷன் இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஒரு குழுவை நியமித்து இந்த வில்லேஜ் கோர்ட்டுகள் எத்தனை பிராதுகளை விசாரித்திருக்கிறது, எத்தனை பேரில் தீர்மானம் எடுத்திருக்கிறார்கள், அப்பீல் பண்ணின கேசு கள் எத்தனை என்பதை யெல்லாம் கணக்கெடுத்து, நல்ல முறையிலே ரிபோர்ட் தயார் செய்ய வேண்டும். உண்மையிலேயே நடப்பதை கட்சிப் பாகுபாடு இல்லாமல், நல்ல முறையிலே நடத்த வேண்டும். இப்படிச் செலவில்லாமல், கிராம மக்களுக்கு நலம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு 200 ரூபாய் வரை ஜுரிஸ்டிக்ஷனை உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். கோர்ட்டுகள் நல்ல முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, செக்ஷன் 73-ஐயும் சேர்த்துத் திருத்தம் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

Sri T. SAMPATH : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த திருத்த மசோதாவை முழு மனதோடு ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த திருத்த மசோதாவின் அவசியம்பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். செக்ஷன் 13-ல் 50 ரூபாய் என்ற பெக்யூனியரி ஜுரிஸ்டிக்ஷனை, 200 ரூபாய் ஆக்க வேண்டும் என்பதுதான் ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் சொன்னது போலவும், மற்ற அங்கத்தினர்கள் சொன்னது போலவும், கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டிலே கட்சிப் பூசல்கள் ஜாஸ்தியாக இருக்கிறது. சில சந்தர்ப்பங்களிலே, நியாயம் இருக் கிறதா என்று கூட ஐயப்பாடு ஏற்படுகிறது. இந்த சந்தர்ப்பத்திலே ரூபாய் 50 ஜுரிஸ்டிக்ஷனை 200 என்று திருத்தம் கொண்டு வரப்பட்டிருக் கிறது. அதைச் சரியான முறையில் நடத்த கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் சொன்னது போல டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டில் பல ட்ரான்ஸ்பர் பெடிஷன்கள் வரு கின்றன. இந்தக் குறையை நீக்க அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும்.

மற்றொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் சொன்னதுபோல, செக்ஷன் **73**-ஐயும் சேர்க்க வேண்டும். முன்சீப் கோர்ட்டுக்கு அப்பீலுக்கு பவர் கொடுக்க வேண்டும். "க்வெஸ்சின் ஆப் லா-வில்" தவறு இருந்தால், ரிவிஷன் மனு செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. முன்சீப் கோர்ட்டுக்கு ரிவிஷன் செய்தால், லா இல்லை என்று தள்ளுபடி செய்துவிடுகிறார்கள். பெக்யூனியரி ஜூரிஸ்டிக்ஷன் அதிகப்படுத்தும்போது, அப்பீல் பவரும் கொடுத்தால்தான் சரியாக இருக்கும்.

திரு அண்ணாமலை ஒன்றைக் குறிப்பிட்டார்கள், இப்பொழுது ஒரு சங்கடமான நிலைமை இருக்கிறது என்று. அது உண்மை. பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் பார்ம் ஆன இடங்களில், வில்லேஜ் கோர்ட்டுகள் இல்லை. கிராம முன்சீப்புக்கு அதிகாரம் இல்லை. இப்பொழுது முன்சீப் கோர்ட்டுக்குப் போவதா, எங்கே போவது என்ற இக்கட்டான நிலை இருக்கிறது. நான்கூட முன்சீப்களுக்குச் சொல்ல, புள்ளி விவரங்கள் வேண்டும், எங்கெங்கே யூனியன் கௌன்சில்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது பற்றி எழுதியிருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் அமைந்து கோர்ட்டுகள் இல்லாத இடங்களில் முன்சீப் கோர்ட்டுக்கே அந்த பவர் அளிக்கப்பட வேண்டும் என்று செய்ய வேண்டும். இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். இந்த வார்த்தைகளுடன் என் பேச்சை முடிக்கிறேன்.

Sri S. NAGARAJA MONIGAR: ஸார், அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் மசோதாவை ஆதரிக்கிறேன். மூன்று திருத்தங்களைக் குறிப்பிட்டார்கள். ஐம்பது ரூபாய் என்றிருந்த வரம்பை 200 ரூபாய் வரை உயர்த்துவது. அன்றைக்கே சம்மதத்தின் பேரில் 200 ரூபாய்க்குக் கீழே அவர்கள் விசாரிக்க அதிகாரம் இருந்தது. இந்த திருத்தத்தை யாரும் வரவேற்பார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஐம்பதிலிருந்து 200 என்று ஆக்கும் நேரத்தில், கொஞ்சம் அதிகமான தொகையை நிர்ணயித்து சம்மதத்தின்பேரில் செய்யலாம் என்று ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். ஆகவே, இன்றைக்கு 200-க்கு மேற்பட்ட ஒரு தொகையை அதற்காக நிர்ணயித்தால் நல்லது. அங்கே கட்சிப் பூசல்கள் இருக்கின்றன, அவர்கள் நல்ல முறையிலே நீதி வழங்க மாட்டார்களா என்று தெரிவிக்கப்பட்டது. நாம் இன்றைக்கு மக்களை நம்பி மக்கள் ராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று சொல்லும்போது, நீதி வழங்குவதில் தவறாக இருப்பார்கள் என்று நினைப்பது அவ்வளவு சரியாக இல்லை. பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்கனவே சில இடங்களில் ஏற்பட்டுவிட்டன. அடுத்த ஏப்ரலில் மேற்கொண்டு இன்னும் மற்ற இடங்களில் ஏற்பட இருக்கின்றன. ஆகையினால் அந்த இடங்களிலே, பஞ்சாயத்து கோர்ட்டுகளாக, க்ளாஸ் 1 பஞ்சாயத்துகளாக நடந்து வந்தன.

இப்போது இவைகளை எல்லாம் பஞ்சாயத்து யூனியன்களிடமே ஒப்படைக்கலாம். அப்படி இல்லையானால் கிராம கோர்ட்டுகள் என்று ஏற்படுத்துவோமானால் மூன்று நான்கு கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து கிராம கோர்ட்டு என்று ஏற்படுத்தி இந்த அதிகாரங்களை அவர்களிடத்தில் ஒப்படைக்க வேண்டும். பஞ்சாயத்துகளிடமோ, பஞ்சாயத்து யூனியன்களிடமோ ஒப்படைப்பது வரவேற்கத் தக்கது. சரியான நீதி வழங்கப்படவில்லை என்ற குறை கட்சிக்காரர்களிடையே ஏற்படுமானால் அப்பீலுக்குப் போவதற்கும் வழிவகை லகுவாகச் செய்யப்பட வேண்டும். முன்சீப் கோர்ட்டில் இருந்து ஜில்லா கோர்ட்டுக்கும், ஜில்லாக் கோர்ட்டில் இருந்து ஹைக்கோர்ட்டுக்கும் போவதற்கு எந்த எந்த வகையில் லகுவான முறைகளை வைத்திருக்கிறோமோ அதைவிட லகுவான முறையில் கிராமக் கோர்ட்டுகளில் இருந்து ஜில்லா முன்சீப் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்வதற்கு வழி செய்ய வேண்டும். அப்போதுதான் ஏழை மக்களுக்கு வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

* **The Hon. Sri M. BHAKTAVATSALAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் அண்ணாமலை அவர்கள் பொதுவாக இந்தத் திருத்தத்தை வரவேற்றார்கள். கிராம

28th March 1961] [Sri S. Nagaraja Monigar]

கோர்ட்டிலே 50 ரூபாய் வரையில் என்பதற்கு பதிலாக 200 ரூபாய் வரையிலும் விசாரணை செய்யலாம் என்று வைப்பது திருப்திகரமாக நடைபெறுகிறது என்றும் சொன்னார். அவர்கள் இதையெல்லாம் கூர்ந்து கவனிக்கிறவர்கள். ஆகவே அவர்கள் சொல்வதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன். 1958-ம் வருஷம் கொண்டு வந்த பஞ்சாயத்து சட்டத்திலே இதை எடுத்துவிட்டோம். கிராமத்திலே கட்சிகள் இருக்கலாம். இன்றைய தினம் கிராம பஞ்சாயத்துகள் என்று ஏற்படுத்தி பெரிய பெரிய பொறுப்புகளை எல்லாம் கிராம மக்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம். அப்படி எல்லாம் இருக்கிறபோது அனாவசியமாக ஜில்லா கோர்ட்டுக்கு எல்லாம் போய் வீணாகப் பணச் செலவு, காலதாமதம் இவை எல்லாம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்றுதான் கிராம கோர்ட்டுகள் என்று ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. கனம் அண்ணாமலை கூறியது போல கிராமக் கோர்ட்டுகள் தீர்ப்புக் கொடுப்பது என்ற ரீதியில் இல்லாமல் இரண்டு கட்சிக்காரர்களுடைய விஷயத்தையும் விசாரித்து கிராமத்திலேயே இரண்டு பேர்களுக்கும் ஒரு சமரசம், நல்லதொரு உடன்பாடு காணும் வகையில் தீர்வு காண வேண்டும் என்பதுதான் லட்சியம். இப்படிச் செய்தால்தான் ஊரிலும் ஒரு கட்சிக்காரருக்கும், இன்னொரு கட்சிக்காரருக்கும் மனஸ்தாபம் வளராமல் இருக்கும். பெரிய கோர்ட்டுகளிலேகூட இப்படித்தான் இரண்டு பேர்களும் ராசியாகப் போகும்படி சில சமயங்களில் சமரசம் செய்து வைக்கிறார்கள். கிராமப் பஞ்சாயத்துகளிடம் இருந்து அந்த அதிகாரத்தை எடுத்த பிறகு ஒரு குழப்பம் இருப்பது உண்மை. யாரிடத்தில் போகிறது, யார் தீர்த்து வைப்பது என்பது நம் முன்புள்ள ஒரு கேள்வி. ஒரு கேள்விக்குப் பதில் அளித்தபோதே நான் சொன்னேன். கிராம கோர்ட்டுகள் இல்லாத இடத்தில் கிராம முன்சீப்தான் கோர்ட்டாக இருந்து சமாசம் செய்து வைக்கிறார், தீர்ப்பு கொடுக்கிறார். ரெவின்யூ போர்டார் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று சொன்னேன். இந்தக் கோர்ட்டு எப்படி நடக்கிறது என்பதைப்பரிசீலனை செய்வதற்கு அகில இந்திய ரீதியில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இதை பரிசீலனை செய்து இன்னும் என்ன மாறுதல் செய்யப்படலாம் என்று சொல்வார்கள். அதற்குத் தக்க ஏற்பாடும் செய்யப்படும்.

கனம் அங்கத்தினர் சீனுவாசய்யர் அவர்களும், கனம் சம்பந்தம் அவர்களும் 73-வது செக்ஷன் மாற்றப்பட வேண்டியதைப்பற்றிச் சொன்னார்கள். கிராம கோர்ட் கொடுக்கிற தீர்ப்புகள் எல்லாவற்றின் பேரிலும் ஒரு கட்டுப்பாடு இன்றி அப்பீல் செய்ய வசதி இருக்குமானால் அப்புறம் கிராம கோர்ட் என்று இருப்பதற்கே அவசியம் இல்லை. எல்லோரும் மேல் கோர்ட்டுக்குப் போவார்கள். அங்கும் வேலை அதிகம். இங்கே நடைபெறுகிற காரியங்கள் வீணாகப் போகும். கிராமக் கோர்ட்டின் லட்சியமே அப்போது பாதிக்கப்படும். ஜில்லா கோர்ட்டுக்கு என்று போனால் செலவும் ஆகிறது.

SRI T. SAMPATH: Because the pecuniary jurisdiction is sought to be raised to Rs. 200.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: 50 ரூபாய் போதாது 200 ரூபாய் வரையிலும் என்றாவது இருக்கவேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் இவ்வாறு கொண்டுவரப்பட்டிருக்கிறது. யாருக்கும் தொல்லை கொடுக்காமல் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகையால் இதை அப்படியே இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: **The question is—**

'That the Madras Village Courts (Amendment) Bill, 1961, as passed by the Legislative Council, be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

[28th March 1961

Clauses 2 to 9 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Village Courts (Amendment) Bill, 1961, as passed by the Legislative Council be passed.'

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Village Courts (Amendment) Bill, 1961, as passed by the Legislative Council be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(6) THE MADRAS HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (AMENDMENT) BILL, 1961, AS PASSED BY THE COUNCIL (L.C. BILL NO. 3 OF 1961).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1961, [a] as passed by the Council, be taken into consideration.'

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பழைய சட்டங்களை எல்லாம் திருத்தி புதிதாக சென்ற ஆண்டிலேதான் அறநிலைய பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது கனம் அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கும். அதற்கு முன்பு இருந்த சட்டத்தில் பல திருத்தங்கள் இருந்தன. அதையெல்லாம் ஒன்றாகவே சேர்த்து சட்டமாகக் கொண்டுவந்தோம். இப்போது நிறைவேற்றப்பட்ட சட்டத்திலும்கூட அறநிலைய பாதுகாப்பு இலாகா கமிஷன் நியமனம் செய்வதைப்பற்றி, டெபுடி கமிஷனர் நியமனம் செய்வதைப்பற்றி ஒன்றும் இல்லை. விதிகளில் வைத்திருந்தோம். பொதுவாக முன்பு இருந்த சட்டத்திலும்கூட அரசாங்கம் அவர்களை நியமிக்கலாம் என்று இருந்தது. ஆனால் அப்படி நியமிக்கிறபோது என்ன என்ன வகையில் நியமிக்கலாம் என்பது சட்டத்தில் இல்லை. முக்கியமாக கீழே இருக்கிறவர்களை அசிஸ்டெண்டு கமிஷனராக நியமிக்கலாம், அசிஸ்டெண்டு கமிஷனர்களை டெபுடி கமிஷனராக நியமிக்கலாம், டெபுடி கமிஷனரை கமிஷனராக நியமிக்கலாம் என்று ப்ரமோஷன் அடிப்படையில் நியமனம் செய்வதற்கு வகை இருந்தால்தான் அவ்விலாகாவில் வேலை செய்கிறவர்களுக்கே ஒரு ஊக்கம் இருக்கும். மற்ற எல்லா இலாகாக்களிலும் அப்படித்தான் இருக்கின்றன. குறிப்பாக கமிஷனர் லீவில் போனால் கீழே உள்ளவரை கமிஷனராகப் போட வசதி இருக்க வேண்டும். இப்போதுள்ள சட்டப்படி தற்காலிகமாகக்கூட அப்படி நியமிக்க வழியில்லை. அதற்காகத்தான் இந்தத் திருத்தம்.

அதுதான் இதிலுள்ள முக்கியமான தவறு. அப்பொழுது அது கவனிக்கப்படவில்லை. இப்படி ஏற்படுமென்று நினைக்கவில்லை. இப்பொழுது இந்த திருத்தமெல்லாம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. டயரக்ட் ரிக்ரூட்மெண்ட்க்கு இடம் இருக்கிறது. நிரந்தரமாக போடவேண்டுமென்றில்லை. குறிப்பிட்ட காலத்திற்குப்போடலாம். இந்த இலாகாவில் தகுதி முக்கியமானது. தகுதியில்லையென்றால் நிர்வாகத்தைச் சரிவர நடத்த முடியாது. படித்திருக்கிறார்கள், ஆகவே செய்து விடுவார்கள் என்று சொல்ல முடியாது. அறநிலையங்களைப்பாதுகாப்பதற்கு ஒரு தகுதி வேண்டும். மத நம்பிக்கை மட்டும் போதாது, பக்தியிருந்தால் போதாது, மூட பக்தியிருந்தால் பிரயோசனமில்லை. நம்பிக்கையிருந்தால் போதாது,

---

[a] Printed as Appendix VII on pages 339–340 infre.